தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

ஆவணி 14, விய – திருவள்ளுவர் ஆண்டு 2037
2006 ஆகஸ்ட் 30, புதன்கிழமை

மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. இரா. ஆவுடையப்பன்** *அவர்கள் தலைமையில் காலை 9–30 மணியளவில் பேரவை கூடியது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

"தூங்காமை கல்வி துணிவுடைமை இம்மூன்றும்
நீங்கா நிலனாள் பவர்க்கு"

காலம் தாழ்த்தாத, விரைவான நடவடிக்கைகளும், அறிவுடைமையும், துணிவும், நாடாளுகின்றவர்களுக்குத் தேவையானவையும், நீங்காமல் நிலைத்திருக்க வேண்டியவையுமான பண்புகளாகும்.

1. இரங்கற் குறிப்பு

முன்னாள் உறுப்பினர் மறைவு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *இரங்கற் குறிப்பு. தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை முன்னாள் உறுப்பினர் திரு. கு. பெரியசாமி அவர்கள் 29–8–2006 அன்று மறைவுற்ற செய்தியினைப் பேரவைக்கு வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கின்றேன்.*

திரு. கு. பெரியசாமி அவர்கள், அன்றைய ஒருங்கிணைந்த தஞ்சாவூர் மாவட்டம், கொடவாசல் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு, 1971 முதல் 1976 வரை திறம்படப் பணியாற்றியுள்ளார்கள்.

அன்னாரது மறைவால் அவரைப் பிரிந்து வருந்தும் அவரது குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் இப்பேரவையின் சார்பிலும், என் சார்பிலும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மறைந்த இப்பெரியவருக்கு மரியாதை செலுத்தும் வகையில், மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித் துளிகள் அமைதி காக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

(உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித்துளிகள் அமைதி காத்தனர்.)

2. வினாக்கள்—விடைகள்

உடுக்குறியிடாத வினாக்கள்
(பட்டியல் 4)@

1—

மின் கம்பிகள்

வினா எண் 2597—திரு. கி. ஆறுமுகம்: மாண்புமிகு மின்சாரம் மற்றும் ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

செங்கல்பட்டு தொகுதி, புதுப்பட்டினம், உய்யாலிகுப்பம் பகுதியில் பழுதடைந்துள்ள மின் கம்பிகளை மாற்ற அரசு முன்வருமா?

விடை—

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரம் மற்றும் ஊரகத் தொழில் துறை அமைச்சர்:

செங்கல்பட்டு தொகுதி, புதுப்பட்டினம், உய்யாலிகுப்பம் பகுதியில் பழுதடைந்துள்ள மின் கம்பிகளை மாற்ற மதிப்பீடு ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது. வெகு விரைவில் மின் கம்பிகள் மாற்றப்படும்.

2—

கரும்பு வெட்டும் தொழிலாளர்கள்

வினா எண் 38—திரு. சி. சண்முகவேலு: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

@ இப்பட்டியலில் உள்ள வினாக்களுக்கான விடைகள் அந்தந்த அமைச்சர்கள் ஒப்புதல் அளித்த தேதியன்று உள்ளபடி அமைந்தனவாகும்.